**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை**
**நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண் 16**
**2026, ஆகஸ்ட் 20, வியாழக்கிழமை**
**ஆவணி 03, திருவள்ளுவர் ஆண்டு – 2057**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, **மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

**"ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்."**

(பசியைப் பொறுத்துக் கொள்ளும் நோன்பைக் கடைப்பிடிப்பதை விடப் பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும்.)

1. **சிறப்பு கவன ஈர்ப்பு**

(i) **"கடல் கொள்ளையர்களால் மீனவர் சுட்டுக்கொல்லப்பட்டது மற்றும் இருவர் காயமடைந்தது குறித்து"**

திரு. எடப்பாடி K. பழனிச்சாமி, திரு. ச. சிவகுமார், திரு. இரா. செந்தில்செல்வன், திரு. ட்டி. இராமச்சந்திரன் மற்றும் ஆர். செல்லசுவாமி ஆகியோர் அரசின் கவனத்தை ஈர்த்தார்கள்.

**மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை ஒன்றை பேரவைக்கு அளித்துள்ளார்கள்.**

(ii) **"கரிஞ்சாம்பட்டி ஓடையை சீரமைப்பது குறித்து"**

திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள் அரசின் கவனத்தை ஈர்த்தார்கள்.

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து விளக்கமளித்தார்கள்.**

(iii) **"திருமூர்த்தி அணையில் வண்டல் மண் அள்ளுவது குறித்து"**

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள் அரசின் கவனத்தை ஈர்த்தார்கள்.

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து விளக்கமளித்தார்கள்.**

(iv) **"சிவகாசியில் பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வு செய்வது குறித்து"**

திரு. தங்கம் தென்னரசு அவர்கள் அரசின் கவனத்தை ஈர்த்தார்கள்.

**மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து விளக்கமளித்தார்கள்.**

(v) **"குஜிலியம்பாடி வட்டாட்சியர் உரிமைகளுக்காக மாணவர்கள் போராடுவது கணக்கெடுத்ததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து"**

திரு. க. மாரிமுத்து மற்றும் திரு. ட்டி. இராமச்சந்திரன் ஆகியோர் அரசின் கவனத்தை ஈர்த்தார்கள்.

**மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் ஆகியோர் இதுகுறித்து விளக்கமளித்தார்கள்.**

(vi) "<u>காட்டுயானை, கரடி, காட்டுப்பன்றிகள் ஆகியவற்றால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், ஒருவர் பலியானது குறித்தும்</u>"

முனைவர் பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் அரசின் கவனத்தை ஈர்த்தார்கள்.

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து விளக்கமளித்தார்கள்.

(vii) "<u>மீனவர்களின் படகுகளை அண்டை மாநிலம் மற்றும் அண்டை நாடுகளால் தாக்குதல் நடத்துவது மற்றும் சிறைபிடிப்பது குறித்து</u>"

திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் மற்றும் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் அரசின் கவனத்தை ஈர்த்தார்கள்.

மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து விளக்கமளித்தார்கள்.

(viii) "<u>மலேசியா பல்கலைக்கழகத்தில் திரு. பாரதிதாசன் என்ற மாணவருக்கு அம்பேத்கர் அயலக உதவித்தொகை வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து</u>"

முனைவர் கோவி. செழியன் அவர்கள் அரசின் கவனத்தை ஈர்த்தார்கள்.

மாண்புமிகு சமூக நீதித் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து விளக்கமளித்தார்கள்.

(ix) "<u>தொண்டாமுத்தூர் தொகுதியில், மூன்று மாநகராட்சி தொகுதியில் ஊர்நத்தம் சொத்துக்கள் ஜீரோ என நிர்ணயம் செய்யப்பட்டதால் பத்திரப்பதிவு செய்வதில் சிரமம் ஏற்பட்டது குறித்து</u>"

திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் அரசின் கவனத்தை ஈர்த்தார்கள்.

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து விளக்கமளித்தார்கள்.

(x) "<u>மயிலம் தொகுதியில் புதிதாக செஞ்சி தொகுதியிலிருந்து டாஸ்மாக் கடை மாற்றப்பட்டது குறித்து</u>"

திரு. சி.வி. சண்முகம் அவர்கள் அரசின் கவனத்தை ஈர்த்தார்கள்.

மாண்புமிகு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து விளக்கமளித்தார்கள்.

(xi) "<u>கடலூர் நெய்வேலி NLC தொழிற்சாலைக்கு நிலம் வழங்கியவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கபடாததும் அதன் அருகே உள்ள விவசாய நிலங்களில் மண் சரிந்தது குறித்து</u>"

திரு. ஆ. அருண்மொழிதேவன், முனைவர் (திருமதி) சௌமியா அன்புமணி மற்றும் திருமதி பிரேமலதா விஜயகாந்த் ஆகியோர் அரசின் கவனத்தை ஈர்த்தார்கள்.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து விளக்கமளித்தார்கள்.

2. <u>தகவல் கோரல்</u>

(i) "ஆறாவது படிக்கும் மாணவன் மின்கம்பி மிதித்து பள்ளியில் இறந்தது குறித்து", திரு. கே.சி. கருப்பணன் அவர்கள் தகவல் கோரினார்.

(ii) "கானாங்காடு ஊராட்சியில், சுண்ணாம்பு சத்து அதிகம் நீரில் கலக்கிறது. அக்குடிநீரை அருந்தும் மக்களுக்கு ஏற்படும் சிறுநீரக பாதிப்பு குறித்து", திரு. க. கார்த்திகேயன் அவர்கள் தகவல் கோரினார்.

...3

(iii) "நாகர்கோவிலில் அமைய உள்ள உறுப்பு கல்லூரிகளுக்கு விரைவாக அனுமதி வழங்குவது குறித்து", திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள் தகவல் கோரினார்.

(iv) "கடையநல்லூரில் இலங்கை தமிழர் முகாமில் 3 பேர் டெங்கு காய்ச்சலால் இறந்தது குறித்து", திரு. தி.மு. இராசேந்திரன் அவர்கள் தகவல் கோரினார்.

(v) "ஒரத்தநாடு தொகுதியில் உள்ள கிராமங்களில் நிலவும் குடிநீர் தட்டுப்பாடு குறித்து", திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் தகவல் கோரினார்.

(vi) "புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் நிலவும் குடிநீர் பிரச்சனை குறித்து", டாக்டர் வை. முத்துராஜா அவர்கள் தகவல் கோரினார்.

(vii) "செய்யாறு அணை கட்டவிருப்பது குறித்து", திரு. ர. அபிஷேக் அவர்கள் தகவல் கோரினார்.

(viii) "சென்னை ஸ்டான்லி மருத்துவமனை அருகே உள்ள நகர்புற வாழ்விட குடியிருப்பில் சமூக விரோத செயலில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்தும், அக்குடியிருப்பில் அடிப்படை வசதிகள் இல்லாமல் மக்கள் துன்பப்படுவது, 2 பேர் வெட்டப்பட்டது குறித்தும்", திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் தகவல் கோரினார்.

(ix) "ஏழு செவிலியர் கல்லூரிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் விரிவுரையாளர்களை நியமிப்பது குறித்து", திருமதி த. லதா அவர்கள் தகவல் கோரினார்.

(x) "திருவையாறு தொகுதி பூதலூர் வட்டம் கடை எண்.8136, தோகூர் கடையை சுக்காம்பார் கிராமத்திற்கு மாற்றுவதை தடுப்பது குறித்து", திரு. துரை சந்திரசேகரன் அவர்கள் தகவல் கோரினார்.

(xi) "உளுந்தூர்பேட்டை நகராட்சியில் நிலவும் குடிநீர் தட்டுப்பாடு குறித்து", திரு. ஜி.ஆர். வசந்தவேல் அவர்கள் தகவல் கோரினார்.

(xii) "விளத்தூரில் துணைமின்நிலையம் விரைந்து முடிக்க வேண்டியது குறித்து", திரு. ஆர். காமராஜ் அவர்கள் தகவல் கோரினார்.

(xiii)"திருத்தணியில் நிலவும் குடிநீர் பிரச்சனை குறித்து", திரு. கோ. அரி அவர்கள் தகவல் கோரினார்.

(xiv) "செஞ்சி தொகுதிக்குட்பட்ட போத்துவாய் வனப்பகுதியில் உள்ள மொனப்பா ஏரியின் இருவாய் மடைகளை சரி செய்வது குறித்து", முனைவர் அ. கணேஷ்குமார் அவர்கள் தகவல் கோரினார்.

(xv) "வால்பாறையில் அரசு கலைக்கல்லூரி அமைக்க வேண்டியது குறித்தும் தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு கேரளாவில் வழங்குவது போல் கூலி வழங்க வேண்டியது குறித்து", திரு. ஆ. குட்டி (எ) சுதாகர் அவர்கள் தகவல் கோரினார்.

(xvi) "மழைக்காலம் வரவுள்ளதால் நீர்நிலைகளில் உள்ள ஆகாயத்தாமரையை அகற்றப்பட வேண்டியது குறித்து", திரு. ஈசிஆர். பி. சரவணன் அவர்கள் தகவல் கோரினார்.

(xvii) "விருத்தாசலம் மாவட்டத்தை தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டியது குறித்து", திருமதி பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் தகவல் கோரினார்.

(xviii) "போடிநாயக்கனூர் தொகுதியில் வளையாற்றின் குறுக்கே அணைக்கட்டும் பணிக்கு அரசு நிதியொதுக்க வேண்டியது குறித்து", திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தகவல் கோரினார்.

(xix) "மின் கட்டண உயர்வு மற்றும் மின் அளவீட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து", திரு. V. செந்தில்பாலாஜி அவர்கள் தகவல் கோரினார்.

3. <u>2026–2027–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்</u>

2026–2027–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

<u>கோரிக்கை எண்.13 – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)</u>

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கை எண்.13–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.14,529,79,71,000/–, மூலதனக் கணக்கில் ரூ.300,00,08,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர் :–

1. திரு. பி.கே. சேகர்பாபு
2. டாக்டர் வை. முத்துராஜா
3. திரு. ஐ.பி. செந்தில் குமார்
4. திரு. எ.வ. வேலு
5. திரு. ஆர். வைத்திலிங்கம்
6. திரு. எஸ். ஆஸ்டின்
7. திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்
8. திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்
9. திரு. G.V. மார்க்கண்டேயன்
10. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா
11. டாக்டர் கலை கதிரவன்
12. திரு. ஈ. ராஜா
13. திரு. அ.செ. வில்வநாதன்
14. திரு. கா. கருணாநிதி
15. முனைவர் அ. கணேஷ்குமார்
16. திரு. ச. சிவகுமார்
17. திரு. நத்தம் இரா. விசுவநாதன்
18. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
19. திரு. ட்டி. இராமச்சந்திரன்
20. திரு. A.P. ஜெயசங்கரன்
21. திரு. ஆ. அருண்மொழிதேவன்
22. முனைவர் பால் மனோஜ் பாண்டியன்
23. திரு. தி.மு. இராசேந்திரன்
24. திரு. ஆர். காமராஜ்
25. திரு. S. அம்பேத்குமார்
26. திரு. எஸ்.எம். சுகுமார்
27. திரு. கோ. அரி
28. திரு. சூரியனூர் அ. சந்திரன்
29. திருமதி லீமாரோஸ் மார்டின்
30. திரு. மு. திராவிடமணி
31. முனைவர் (திருமதி) சௌமியா அன்புமணி
32. திரு. க. மாரிமுத்து
33. திரு. ஓ.எஸ். மணியன்
34. திரு. ஆ. குட்டி (எ) சுதாகர்
35. திரு. வே. சம்பத்குமார்
36. திரு. சி.வெ. கணேசன்
37. திரு. E.C. கோவிந்தராசன்
38. திரு. அர. சக்கரபாணி
39. திரு. ஜி.ஆர். வசந்தவேல்
40. திரு. துரை. சந்திரசேகரன்
41. திரு. சு. பழனிசாமி
42. திரு. நிவேதா எம். முருகன்
43. திரு. எஸ்.பி. வேலுமணி
44. திரு. சா. வேலு
45. முனைவர் கோவி. செழியன்
46. திரு. கே.கே. கதிரவன்

...5

<u>கோரிக்கை எண்.12 – கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)</u>

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கை எண்.12–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,026,59,55,000/–, மூலதனக் கணக்கில் ரூ.12,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர் :–

1. திரு. பி.கே. சேகர்பாபு
2. திரு. ஐ.பி. செந்தில் குமார்
3. திரு. எ.வ. வேலு
4. திரு. ஆர். வைத்திலிங்கம்
5. திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்
6. திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்
7. திரு. G.V. மார்க்கண்டேயன்
8. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா
9. திரு. ஆ. குட்டி (எ) சுதாகர்
10. டாக்டர் கலை கதிரவன்
11. திரு. ஈ. ராஜா
12. திரு. நிவேதா எம். முருகன்
13. திரு. அ.செ. வில்வநாதன்
14. திரு. கா. கருணாநிதி
15. முனைவர் அ. கணேஷ்குமார்
16. திரு. ச. சிவகுமார்
17. திரு. நத்தம் இரா. விசுவநாதன்
18. திரு. க. மாரிமுத்து
19. திரு. ட்டி. இராமச்சந்திரன்
20. திரு. A.P. ஜெயசங்கரன்
21. திரு. P. ஹரிபாஸ்கர்
22. முனைவர் பால் மனோஜ் பாண்டியன்
23. திரு. எஸ். ஆஸ்டின்
24. திரு. தி.மு. இராசேந்திரன்
25. திரு. ஆர். காமராஜ்
26. திரு. S. அம்பேத்குமார்
27. திரு. எஸ்.எம். சுகுமார்
28. திரு. ஆ. அருண்மொழிதேவன்
29. திரு. கோ. அரி
30. திரு. சூரியனூர் அ. சந்திரன்
31. திரு. மு. திராவிடமணி
32. முனைவர் (திருமதி) சௌமியா அன்புமணி
33. திரு. க. வைத்திலிங்கம்
34. திரு. ஓ.எஸ். மணியன்
35. திரு. வே. சம்பத்குமார்
36. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
37. திரு. சி.வெ. கணேசன்
38. திரு. அர. சக்கரபாணி
39. திரு. துரை. சந்திரசேகரன்
40. திரு. பூண்டி கே. கலைவாணன்
41. திரு. கா. அண்ணாதுரை
42. திரு. சு. பழனிசாமி
43. திரு. எஸ்.பி. வேலுமணி
44. திரு. சிவ. வீ. மெய்யநாதன்
45. திரு. பி.எஸ். சீனிவாசன்
46. முனைவர் கோவி. செழியன்

மேற்காணும் மானியக் கோரிக்கைகள் மற்றும் வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதத்தில் கீழ்க்காணும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்:–

1. **திரு. அர. சக்கரபாணி**
2. **டாக்டர் தி. அருண் குமார்**
3. **திருமதி மரகதம் வெற்றிவேல்**
4. **திருமதி அ. குழந்தை ராணி நாச்சியார்**
5. **திரு. பூண்டி கே. கலைவாணன்**
6. **திருமதி லீமாரோஸ் மார்டின்**
7. **திரு. சூரியனூர் அ. சந்திரன்**
8. **திரு. ரா. அய்யனார்**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஆகியோர் பதிலுரை வழங்கினார்கள்.

மானியக் கோரிக்கை எண்.13 – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மீது சட்டமன்ற உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மேலும், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) துறையின்கீழ் கோரிய தொகைகள் வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.12 – கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)–ன்மீது சட்டமன்ற உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மேலும், கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)–ன்கீழ் கோரிய தொகைகள் வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

3. <u>பேரவைக்கு ஓர் அறிவிப்பு</u>

மானியக் கோரிக்கை தொடர்பான கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்களை மாண்புமிகு அமைச்சர்கள் ஒருநாளுக்கு முன்பாகவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

பேரவை பிற்பகல் 4.28 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் **2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21–ஆம் நாள் வெள்ளிக்கிழமை** காலை 9.30 மணிக்குக் கூடும்.

**இரா. சாந்தி,**
**செயலாளர்.**